[1994 ஏப்ரல் 13

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் : விடைகள். வினா எண் 261, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை.

வினா எண் 262, திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

262—

சேடப்பட்டியில் அரசு மகப்பேறு மருத்துவமனை ஏற்படுத்துதல்

*** 19347**— திருமதி இரா. பாண்டியம்மாள்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி சேடப்பட்டியில், அதிக எண்ணிக்கை கொண்ட படுக்க வசதிகளுடன் அரசு மகப்பேறு மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டியில் தற்பொழுது ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சேடப்பட்டியில் அரசு மகப்பேறு மருத்துவமனை துவக்க கருத்துரு ஏதும் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டித் தொகுதி மக்கள், குறிப்பாக தாய்மார்கள் அவசரம், அவசரமாக பிரசவத்திற்குச் செல்லவேண்டுமென்றால் 18 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள உசிலம்பட்டிக்கு வரவேண்டும். இல்லாவிட்டால் மதுரைக்குத்தான் செல்லவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதாலும், இது பேரவைத் தலைவரின் தொகுதியாக இருப்பதனாலும் தாங்கள் மறுபரிசீலனை செய்து மகப்பேறு பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருக்காகவாவது 'ஆம்' என்கிற பதில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பேரவைத் தலைவரின் தொகுதி என்ற காரணத்தால்தான் நானும் காலையிலிருந்து யோசித்து, யோசித்துப் பார்த்தேன். ஆனால் நிதிப்பிரச்சினை கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் 'டினிப்' மூலமாக 12,40,000 ரூபாயை ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக ஒதுக்கி சில திட்டங்களைச் செய்யவேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் முழுவதும் இருந்து 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டும்தான் இப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சேடப்பட்டியும் ஒன்று என்று சொல்கிறபோது நிச்சயமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு சேடப்பட்டி தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு இந்த நிதியாண்டே அது நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு வேகமாக முடியுமோ அந்த அளவுக்கு வேகமாக நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய தொகையை 'டினிப்' மூலமாக ஒதுக்கித் தருவதாகத்தான் சொன்னார்கள். ஆகவே நன்றி சமூகநலத்துறைக்குத்தானே சொல்லவேண்டும் என்று சமூகநலத்துறை அமைச்சர் வாதாடுகிறார். (சிரிப்பு) இருந்தாலும் இந்த மருத்துவமனைகள் கட்டுகின்ற பொறுப்பு அவர்கள் இடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே நிதி கொடுத்ததற்கு நன்றி என்று சொல்லவந்தால் இடையிலே நிதி அமைச்சர் இருக்கிறார். (சிரிப்பு)

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியோ மொத்தத்திலே இந்த அரசுக்கு, புரட்சித் தலைவிக்கு நன்றியைச் சொல்லவேண்டும். பொதுவாக எல்லாத் துறைகளும் அவர்கள் கட்டுப்பாட்டிலேதான் இருக்கின்றன. 'டினிப்' என்று சொன்னாலும் அவர்கள் சில புரோகிராமுக்கு வைத்து இருக்கிறார்கள்.

எந்தெந்த புரோகிராமுக்குக் கட்ட வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே இந்த மருத்துவமனைக்கு முன்னேற்றத்திற்காகக் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 263, திரு. ஆர். முருகையா பாண்டியன், இருக்கையில் இல்லை.

வினா எண் 264, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

264—

பொள்ளாச்சியிலிருந்து கிணத்துக்கடவுக்கு நகரப்பேருந்து விடுதல்.

*** 10970**-திரு. நா. சா. பழனிசாமி:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து வடக்கிபாளையம் சாலையில் சென்று குள்ளிசெட்டிபாளையம், சந்தேகவுண்டன்பாளையம் வழியாக கிணத்துக்கடவுவரை புதிதாக ஒரு நகரப் பேருந்து விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலை சரியில்லாத காரணத்தால் பேருந்து இயக்க இயலாது.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுள்ள குள்ளிசெட்டிபாளையம், சந்தேகவுண்டன்பாளையம் கிராமங்கள் வடக்கிப் பாளையம் சாலைக்கும் கோவை-பொள்ளாச்சி சாலைக்கும் இடையிலே உள்ளே தள்ளி இருக்கின்ற கிராமங்கள். அந்த கிராமங்களை இணைக்கின்ற சாலை தற்போது ஒன்றியச் சாலையாக இருக்கிறது. இப்போது ஓரளவுக்கு நல்லமுறையிலே அந்த ரோடுகளைச் சரி செய்திருக்கிறார்கள். இப்போது அதை விட மிக மோசமான சாலைகளில் எல்லாம் பஸ்கள் சென்றுகொண்டிருக்கின்றன. நெடுஞ்சாலையோடு நேரடித் தொடர்பற்று இருக்கின்ற இந்தக் கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்துகின்ற வண்ணம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த வழித்தடத்தில் புதிய பேருந்தை விடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இதைவிட மோசமான சாலைகளில் எல்லாம் பேருந்து இயக்கப்படுகிறது